بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்.

August 09 2013

தமிழாக்கம் : மவ்லவி N. ஷியாவுல் ஹக் சாஹிப்

# நீதி – நேர்மை – இறையச்சம்

இன்றைய குத்பாவும் கடந்த குத்பாவின் தொடர்ச்சியே ஆகும். இன்று, சமூகத்தின் உரிமைகளை நிறைவேற்றுவது, சமூகத்திலிருந்து கூச்சல் குழப்பங்களை ஒழிப்பது, சமூகத்தில் அமைதியையும் சமாதானத்தையும் பரப்புவது, நீதி, நேர்மையை நிலைநாட்டுவது, உள்ளங்களை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப கட்டுப்பட வைப்பது, வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பான விசயங்களை எடுத்துரைக்கக் கூடிய இரண்டு முக்கியமான விசயங்களை எடுத்துக் கூறுவேன். மேலும் இதில் நான் திருக்குர்ஆனின் போதனைகள் பற்றியும் எடுத்துரைப்பேன்.

இன்று இஸ்லாத்தின் மீது அதன் போதனை (நவூதுபில்லாஹ்) கடினமானதாக இருக்கிறது என்று ஆட்சேபனை செய்யப்படுகின்றது. மேலும் இதில், தீவிரவாதம், கூச்சல், குழப்பத்தைத் தவிர வேறொன்றுமில்லை எனவும் கூறப்படுகின்றது. ஒரு சில நாட்களுக்கு முன்பு, அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவர் இஸ்லாத்தில் ஜுமுஆ நாள் (நவூதுபில்லாஹ்) குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய நாளாகும் என எழுதியிருந்தார். மேலும் இஸ்லாத்திற்கு எதிராக பலவற்றையும் எழுதியிருந்தார். ஜமாஅத் அந்த பத்திரிகையை தொடர்பு கொண்டது. மேலும் இஸ்லாத்தின் அழகைக் குறித்து நமது ஓர் இளைஞர் மிகவும் அழகான கட்டுரையை எழுதியிருந்தார். மேலும் அவருடன் தொடர்பு கொண்டு இஸ்லாத்தின் அழகு, இஸ்லாத்தின் அழகிய போதனை, இஸ்லாத்தின் குறிக்கோள் மற்றும் ஜுமுஆவின் குறிக்கோள் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள். இது தொடர்பாக மேலும் கட்டுரைகள் எழுதுவதற்கு நான் சில அறிவுரைகளை வழங்கியுள்ளேன்.

இன்று இதனை அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் தான் செய்து வருகிறது. அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நேசரின் குறிக்கோளை முன்னேற்றியவாறு, இஸ்லாத்தின் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு பதில் கொடுப்பதோடு நின்று விடாமல் ஆதாரங்களுடன் பகைவர்களின் வாயை அடைக்கின்றது. இது நமது பணியே ஆகும். இருந்தபோதிலும் இறைவனே இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளான். சில சமயங்களில் இஸ்லாத்தின் போதனையை வெளிப்படுத்த முஸ்லிம் அல்லாத நீதியை விரும்பக்கூடியவர்களையும் ஏற்படுத்தி விடுகின்றான்.

இந்த வகையில் ஒரு கத்தோலிக்கக் கிறிஸதவர் – இவர் Professor Scholar ஆவார். அவர் கடந்த வாரம் Daily Telegrap –ல் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் அவர், இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை புகழ்ந்து எழுதியிருந்தார். மேலும் நாஸ்தீகத்திற்கு எதிராகவும் மேலும் இங்குள்ள தேசியவாத அமைப்புகளுக்கு எதிராகவும் அவர் எழுதியிருந்தார். முஸ்லிம்களின் உயர்வான நடவடிக்கைகளையும், உயர்வான போதனைகளையும் நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும் என எழுதியிருக்கின்றார்.

இன்றைய நாட்களில் மதம் மற்றும் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் இறை இருப்பை மறுக்கக்கூடிய இவர்களே ஆவார்கள். எவ்வாறிருப்பினும், நான் கூறியது போன்று இந்த பணி நம்முடையதாகும். மார்க்கத்தின் தேவை, உயிருள்ள இறைவன் இருக்கின்றான் என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். ஏனென்றால் ஓர் உண்மையான முஸ்லிமால் தான் இந்த வேலையைச் செய்ய முடியும். மேலும் காலத்தின் இமாமுடன் இணைந்தவாறு அஹ்மதிகள் மட்டும் இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் புரியக்கூடியவர்களும் அதனை உலகில் பரப்பக்கூடியவர்களும் ஆவர். இவ்வாறு இருக்கவும் வேண்டும். இந்தப் பணியை திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் கட்டளைகளின்படி செயல்படுவதன் மூலமே செய்ய முடியும்.

நான் கூறியது போன்று இந்த இரண்டு கட்டளைகளைப் பற்றி கூறுவேன். இது அதிகாரம் அல் அன்ஆம், வசனம் 152, 153 –ல் வந்துள்ள போதனைகளின் பட்டியலில் கூறப்பட்டுள்ளதாகும். இதனை நான் கடந்த சில

குத்பாக்களில் எடுத்துரைத்து வருகின்றேன். அதில் இன்று எடுத்துரைக்கப்பட வேண்டிய விசயங்களில் முதல் வசனம், நீதி, நேர்மையுடன் தொடர்புடையதாகும்.

وَإِذَا قُلْتُمْ فَاعْدِلُوا وَلَوْ كَانَ ذَا قُرْبَىٰ *அதாவது நீங்கள் பேசும் போது அவர் எவ்வளவு நெருக்கமானவராக இருந்தாலும் சரி நீதியைக் கடைபிடியுங்கள்.(6:153)* நேர்மைக்கு பல்வேறு வகைகள் இருக்கின்றன. இதனைப் பற்றி திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் விளக்கமான கட்டளைகளும் உள்ளன. நெருங்கிய உறவினர்கள் பற்றி கொடுக்கப்படும் சாட்சியத்தைப் பற்றி அல்லாஹ் மற்றோரிடத்தில் மிகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்துள்ளான். அதில் உறவினர்கள் மட்டும் அல்ல. மாறாக சாட்சி கூறக்கூடியவரையும் சேர்த்துள்ளான். மேலும் பெற்றோர்களையும் இணைத்துள்ளான்.

**இது அதிகாரம் அந்நிஸாவின் 136 வது வசனமாகும். அதில் அல்லாஹ் கூறுகின்றான்:**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ بِالْقِسْطِ شُهَدَاءَ لِلَّهِ وَلَوْ عَلَىٰ أَنْفُسِكُمْ أَوِ
الْوَالِدَيْنِ وَالْأَقْرَبِينَ ۚ إِنْ يَكُنْ غَنِيًّا أَوْ فَقِيرًا فَاللَّهُ أَوْلَىٰ بِهِمَا ۖ فَلَا تَتَّبِعُوا
الْهَوَىٰ أَنْ تَعْدِلُوا ۚ وَإِنْ تَلْوُوا أَوْ تُعْرِضُوا فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا

*நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்கே சாட்சி கூறுபவர்களாயிருங்கள். அவர் செல்வராயினும், ஏழையாயினும் சரி. அல்லாஹ் அவ்விருவருக்கும் அதிக அளவில் நன்மையை விரும்பக்கூடியவன் ஆவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படுங்கள். நீதியை விட்டு விடாதீர்கள். நீங்கள் மறைத்தாலோ தட்டிக் கழித்தாலோ நிச்சயமாக நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகின்றான். (4:136)*

இங்கு சாட்சிகளைப் பற்றி போதனை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது உங்களது சாட்சியம் தூய்மையான முறையில் அல்லாஹ்வின் விருப்பத்தை முன்னிறுத்தியவாறு இருக்க வேண்டும். மேலும் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

உண்மை மற்றும் நீதியில் நிலைத்திருங்கள். உங்களது ஒவ்வொரு சாட்சியமும் இறைவனுக்காக இருக்க வேண்டும். உலகில் நீதி மற்றும் நேர்மையை நிலைநாட்ட ஒரே ஒரு வழி மட்டும் தான் உள்ளது. அது இறை விருப்பத்தைப் பெறக்கூடிய குறிக்கோள் ஆகும். இதனைத் தவிர உலகில் அநீதி மற்றும் சுய நோக்கத்தை அடைவதை ஒழிக்கக்கூடிய வெறெந்த உயர்வான வழிமுறையும் இல்லவே இல்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

அனைத்து வித ஆற்றல்களுக்கும் அரசர் நீதி ஆகும். இந்த ஆற்றல் மனிதனிடமிருந்து மறைந்து விட்டது என்றால் பிறகு அவர் அனைத்தையும் இழந்து விட நேரிடும். நீதி மற்றும் நேர்மை ஆகிய பண்புகள் மனிதனிடம் இருப்பது அவனது திறமைகளைப் பிரகாசமாக்கி விடுகிறது.

விளக்கமாக கூறப்பட்ட இந்த வசனத்தின்படி செயல்பட்டால், அதாவது நீதியை நிலைநாட்ட மனிதன் தனக்கு எதிராக சாட்சியம் கூறவும் தயங்கக் கூடாது. தனது பெற்றோருக்கு எதிராக சாட்சி கூறவும் தயங்கக் கூடாது. மேலும் நெருங்கிய உறவினர்களுக்கு எதிராக சாட்சி கூறுவதற்கும் தயங்க வேண்டாம். இவ்வாறிருந்தால் பிறகு ஓர் அழகிய சமூகம் உருவாகி விடும். பிறகு இதற்கான உதாரணம் வேறெங்கும் கிடைக்காது. இரு பிரிவினருக்கிடையில் பிரச்சனை எழும்போது தான் சாட்சிக்கான தேவை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட நேரத்தில் இரு பிரிவினர்களிடமும் தனது கருத்துக்களை கூறும்படி கேட்கப்படும் அல்லது சில சாட்சிகள் கொண்டுவரப்படுவார்கள். பிறகு பிரச்சனையின் உண்மைத்தன்மை என்னவென்பது தெரிய வரவும், தீர்ப்பு வழங்கவும், நீதி மற்றும் நேர்மையை நிலைநாட்ட எளிமையாக இருக்க வேண்டும் என்பதால் ஆகும்.

சாட்சிகளே பொய்யர்களாக இருந்தால், தமது கூற்றுகளை கருத்துக்களை மறைத்து, தட்டிக் கழித்தாலோ அநியாயமாக பிறருடைய உரிமையைப் பெற வேண்டும் என்பதற்காக கூறினாலோ பிறகு தீர்ப்பு வழங்கக்கூடியவருடைய தீர்ப்பும் சரியாக இல்லாமலும் போகலாம். சரியாக இல்லாமல் போவது மட்டுமின்றி அதிக அளவு தவறாகவும் இருக்கும். இப்படிப்பட்ட நிலையில் சாட்சிகளை கூறக்கூடியவர்கள் மீது தான் பாவம் உண்டாகும். இது தவிர தீர்ப்பு வழங்கக் கூடியவர் மீது பாவம் உண்டாகாது.

சில சாட்சி தனது சுயநலத்திற்காக அல்லாமல் தனது நெருங்கிய உறவினர்களுடைய நலனுக்காக தவறான சாட்சியத்தைக் கூறுகின்றனர். தீர்ப்பு வழங்கக்கூடிய பிரிவினரை தவறாக வழிநடத்த முயற்சி செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். இறுதியில் குற்றவாளிகளாகி விடுவார்கள்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவராவது தவறான சாட்சியைக் கூறி என்னை தவறான தீர்ப்பு வழங்கச் செய்தால், அது நெருப்பின் துண்டை அவருக்கு கொடுப்பதைப் போன்றதாகும்.

எனவே பொய்யான கூற்றைக் கூறியும், பொய்யான சாட்சி கூறியும், நெருப்பின் துண்டைப் பெறுவதிலிருந்து ஒவ்வொருவரும் தவிர்ந்திருக்க வேண்டும். இதிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடியவர் தான் உண்மையான மூஃமின் ஆவார்.

நான் அதிகாரம் அந்நிஸாவின் வசனங்களை ஓதினேன். இதற்கு பிறகு குடும்பப் பிரச்சனைகள் தொடர்பான கட்டளைகளும் வருகின்றன. அநியாயமான முறையில் தனது உரிமைகளை அது கணவனாக இருந்தாலும் சரி மனைவியாக இருந்தாலும் சரி பெற முயற்சி செய்யக் கூடியவர்கள் இதனைப் போன்று தலாக் மற்றும் குலா வின் போது ஆண் அல்லது பெண்ணுடைய உறவினர்கள் சில பொய்யான சாட்சியம் கூறி அநியாயமாக சில பயன்களைப் பெற முயற்சி செய்யக் கூடியவர்கள், நீதியைக் கொலை செய்யக் கூடியவர்கள் ஆவர்.

இதன் மூலம் உலகில் தற்காலிக நன்மையை அடைந்து விடுவார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது போன்று, அது நெருப்பின் துண்டாகும். அவர்கள் அதனை வாங்கிக் கொள்ளக் கூடியவர்கள் ஆவார்கள். மேலும் இது மறுமையில் தீய முடிவின் பால் இழுத்துச் செல்லும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

இரு பிரிவினர்களும், சாட்சி கூறுபவர்களும் சுய விருப்பத்தைப் பின்பற்றியவாறு நீதியிலிருந்து விலகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே மன இச்சைகளைப் பின்பற்றாதீர்கள். நீதியை நேர்மையை நிலைநாட்ட முயற்சி செய்யுங்கள்.

**அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:**

وَإِنْ تَلْوُا أَوْ تُعْرِضُوا فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا *நீங்கள் மறைத்தாலோ தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகின்றான். (4:136)*

எனவே, இவ்வாறு பொய்யான சாட்சிகள், தீர்ப்பு வழங்கக்கூடியவரை ஏமாற்றி விடலாம். யாரிடம் வழக்கு உள்ளதோ அவரை ஏமாற்றி விடலாம். அவரிடமிருந்து தனக்கு சாதகமாகவோ அல்லது எதிர் பிரிவினருக்கு எதிராகவோ அல்லது நீதிக்கு மாற்றமாகவோ தீர்ப்பு வழங்க வைக்கலாம். ஆனால் நன்கு அறியக்கூடிய இறைவனை நம்மால் ஏமாற்ற முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக நிகாஹ் குத்பாவில் திருக்குர்ஆனின் கட்டளையாகிய நேரான சரியான விசயங்ளைக் கூற வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். ஏனென்றால் திருமணத்தை முடிவு செய்யும் போதும், பரஸ்பரம் இணைந்து வாழக்கூடிய நேரத்திலும் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் அந்த நேரத்தில் கூலூ கவ்லன் ஸதீதா நேரான வார்த்தையைக் கூறுங்கள். அதனை ஒருபோதும் விடக்கூடாது. அதனை விடுவது உங்களை இறையச்சத்திலிருந்து விலக்கி விடும். இது உங்களை நீதி மற்றும் நேர்மையிலிருந்து விலக்கி விடும். இது சமூகத்தில் குழப்பம் ஏற்படக் காரணமாக அமையும்.

நமது நீதித்துறையில் குலா மற்றும் தலாக் போன்ற பிரச்சனைகள் வரும்போது, சிலவற்றை நானும் பார்த்திருக்கின்றேன். அதில் நீதியை அடிப்படையாகக் கொண்ட உண்மையினை அடிப்படையாகக் கொண்ட கருத்துகள் கூறுவதில்லை. சாட்சி கூறக்கூடியவர்களும் தனது சாட்சியத்தை இதன் அடிப்படையில் கொடுப்பதில்லை.

இதனைப் போன்று கொடுக்கல் வாங்கல் பிரச்சனையும் உள்ளது. இதிலும் சிலர் தற்காலிக மற்றும் சுய லாபத்திற்காக இறையச்சத்திலிருந்து விலகியவாறு நெருப்புத் துண்டை பெறக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். நெருப்புத் துண்டைப் பெறக்கூடியதைப் பற்றியுள்ள ஹதீஸிலும் இரண்டு சகோதரர்களுடைய சொத்துப் பிரச்சனையே கூறப்பட்டிருக்கின்றது.

அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், பேச்சுத்திறமை உடையவர் என்னிடமிருந்து தீர்ப்பினை தனக்கு சாதகமாகப் பெற்று விடலாம். ஆனால் நான் அவருக்கு

கொடுப்பது நெருப்புத் துண்டாகும். மறுமை நாளில் இதுதான் கொளுந்து விட்டெறியும் தீயாகும் என்று கூறினார்கள். இதனை கேட்ட இரண்டு சகோதரர்களும் சப்தமிட்டு அழத் தொடங்கினர். மேலும் எங்களுக்கு எதுவும் வேண்டாம் என்றனர். நாங்கள் எங்களது உரிமையை விட்டுக் கொடுக்கின்றோம்; மற்றவர்களுக்கு கொடுத்து விடுகின்றோம் என்றனர். அப்போது நபி (ஸல்) கூறினார்கள்: தனது உரிமையை விட்டுக் கொடுப்பதும் தவறாகும். உங்களுக்கு உரிமை இருக்கின்றது என்றால் கண்டிப்பாக அதனை வாங்கிக் கொள்ளுங்கள். பிரச்சனை முடிவுக்கு கொண்டு வரப் படவில்லை என்றால், எந்தவித பத்திரமும் இதற்கு சாட்சியாக இல்லையென்றால், சாட்சியாக கொண்டு வருவதற்கு எவரும் இல்லையென்றால், சீட்டு குலுக்கி போடுங்கள். யாருக்கு எந்தப் பகுதி வருகின்றதோ அதனை பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆக, இதுதான் தீர்வுக்கான வழியாகும். இந்த இறையச்சத்தின் தரம் ஒரு மூஃமின் இடத்தில் இருக்க வேண்டும். அல்லாஹ் நீதியினை நிலைநாட்டுவதில் தடையாக இருக்கக்கூடியவர்கள் மீது கருணை காட்டுவானாக! அவர்களுக்கு அறிவினை வழங்குவானாக! குடும்ப அளவிலும் சரி, வியாபார அளவிலும் சரி, உண்மையை அடிப்படையாகக் கொண்ட சாட்சிகள் இருந்தால், நீதியை நிலைநாட்டுவதற்கான சாட்சிகள் இருந்தால், பிறகு நமது சமூகத்தினால் சொர்க்கத்தின் உதாரணத்தை இவ்வுலகிலும் வெளிப்படுத்திக் காட்ட முடியும். நான் கூறியது போன்று திருக்குர்ஆனில் (அத்ல்) நீதி தொடர்பாக விளக்கமான கட்டளைகள் உள்ளன. இது தொடர்பான மேலும் ஒன்றிரண்டு வசனங்களை நான் எடுத்துரைக்கின்றேன்.

**அல்லாஹ் அதிகாரம் அந்நிஸாவிலேயே கூறுகின்றான்.**

إِنَّ اللّٰهَ يَأْمُرُكُمْ أَنْ تُؤَدُّوا الْأَمٰنٰتِ إِلٰٓى أَهْلِهَا ۙ وَإِذَا حَكَمْتُمْ بَيْنَ النَّاسِ أَنْ

تَحْكُمُوْا بِالْعَدْلِ ۚ إِنَّ اللّٰهَ نِعِمَّا يَعِظُكُمْ بِهٖ ۗ إِنَّ اللّٰهَ كَانَ سَمِيْعًا بَصِيْرًا ﴿٥٩﴾

*நீங்கள் அமானத்துகளை (நம்பி ஒப்படைப்பவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படைக்க வேண்டு மென்றும், நீங்கள் மக்களுக்குகிடையில் தீர்ப்பு வழங்கும் போது, நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும், நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். அல்லாஹ் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றது எதுவோ, நிச்சயமாக அதுவே மிகவும் சிறந்தது. நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும், பார்ப்பவனுமாவான். (4:59)*

இந்த வசனத்தில் முதல் விசயமாக அமானத்துகளைத் தகுதியானவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இதனைப் பற்றி, சில நாட்களுக்கு முன்பு நான் விளக்கமாக ஒரு குத்பா கொடுத்திருந்தேன். இந்த வருடம் பொறுப்பாளர்கள் தேர்ந்தேடுப்பதற்கான வருடம் ஆகும். ஆகையால் சுய விருப்பங்களை முன்நிறுத்தாமல், குடும்பத் தொடர்பை முன்நிறுத்தாமல் நீதியை நிலைநாட்டியவாறு அமானத்துகளுடைய உரிமைகளை நிறை வேற்றியவாறு தமது பணியில் நீதியுடன் செயல்பட கூடிய நபர்களைப் பொறுப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனக் கூறினேன்.

எவ்வாறாயினும் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. சில இடங்களில் தேர்ந்தெடுக்கக் கூடியவர்கள் தமது பார்வையில் சிறந்த பொறுப்பாளரைத் தேர்ந்தெடுத்துள்ளனர். சில இடங்களில் நானே சில மாற்றங்களைச் செய்தேன். மேலும் ஆலோசனை வழங்கக் கூடியவர்களது ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஒருவர் சிறப்பாக செயல்பட்டு வந்திருந்தார் என்றால், அவரே இருக்குமாறு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொருவருக்கு பணியாற்றுவதற்கு ஒரு தரம் இருக்கின்றது. அந்த தரத்தை அந்த மனிதன் அடைந்து விட்டால், அவரது திறமைகள் அது வரை சென்று விட்டால் பிறகு அந்த துறை மேலும் முன்னேற்றம் ஏற்படாது. ஓரிடத்தில் சிறப்பாக பணியாற்றாதவர் வேறொரிடத்தில் சிறப்பாக பணியாற்ற முடியும். இதனாலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சிலரை கோபத்தின் காரணமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என சில மக்கள் கருதுகின்றனர். கோபத்தை விட ஜமாஅத் நலன் தான் அங்கு பார்க்கப்படுகிறது. நான் இதில் எங்கு ஜமாஅத் நலனை பார்த்தேனோ, அங்கு மாற்றங்கள் செய்யப்பட்டன. அங்கு நீதியும் இதுவாகவே இருந்தது. அதாவது அப்படிப்பட்ட பிரிவுகளில் மாற்றங்களைக் கொண்டு வருவது அவசியமானதாக இருந்தது. உள்ளங்களின் நிலையை அல்லாஹ்வே நன்கறிகிறான். நாம் ஆலோசனை மற்றும் முடிவுகளை வெளிப்படையான நிலை கண்டே செய்கின்றோம்.

ஆனால் சில நாடுகளின் உள்ளூர் ஜமாஅத்துகளில் தற்பொழுதும் கூட சுய விருப்பம் மற்றும் உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். அல்லாஹ் இப்படிப்பட்ட மக்கள் மீது கருணை புரிவானாக! மேலும் நீதியை விட தனது சுய விருப்பத்திற்கு முக்கியத்துவம் வழங்கக்கூடிய இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! எவ்வாறாயினும் தேர்தல்கள் முடிந்து விட்டன. ஆனால் தற்போது பொறுப்பாளர்களாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய கடமை என்னவென்றால், தனது பலவீனங்களை இறைவன் முன்பு வைத்தவாறு அவனிடம் மன்னிப்பு மற்றும் உதவியை வேண்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும். நீதியை நிலைநாட்டியவாறு பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும். பொறுப்பும் ஒரு சேவையாகும். அல்லாஹ்வின் அருளாகும். பரிசு ஆகும். அதற்கு கண்ணியம் அளிக்க வேண்டும்.

ஜமாஅத் சகோதரர்களுடன் பழகுவதிலும் அவர்களது பிரச்சனைகளைக் களைவதிலும் அவர்களது தர்பிய்யத்தின் பால் கவனம் செலுத்துவதிலும் ஜமாஅத்தின் குறிக்கோளை அடைவதற்குரிய வழிகளில் நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவதிலும் நீதியுடன் நடக்க வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். கடினமாக உழைப்பதற்குரிய உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். ஏனென்றால் தஹ்கமு பில் அத்ல் – நீதியுடன் தீர்ப்பு வழங்குங்கள் என்பதன் எதிர்பார்ப்பு, தனது அனைத்து திறமைகளுடன் ஆற்றல்களுடன் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக எந்தப் பணி தரப்பட்டாலும் அதனை செய்யும் போது தான் நிறைவேறும். இதில் அனைத்து பொறுப்பாளர்களும் அடங்குவர். உள்ளூர் அளவிலும், தேசிய அளவிலும் உள்ள பொறுப்பாளர்கள் அனைவரும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜமாஅத்தின் நன்மை ஏனைய அனைத்து சுய பலனை விட்டும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நான் நன்கு பார்ப்பவனாக இருக்கின்றேன் என அல்லாஹ் கூறுகின்றான். ஒவ்வொரு நொடிப் பொழுதும் நாம் செய்யக்கூடியசெயல்கள் அவனுக்கு நன்றாகத் தெரியும். மேலும் அது கணக்கிடப்பட்டு வருகின்றது.

மார்க்கத்திற்கு சேவை செய்வதற்காக கிடைத்த வாய்ப்பினை இறை அருளாகக் கருதி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் மேலும் நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்களும் சிறப்பாக செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் உலகத் தலைவர்களிடமும் கேட்பான். அவர்களிடமும் விசாரணை நடைபெறும். மேலும் இறைவன் பெயரால் ஏதாவது ஒரு பணிக்காக நியமிக்கப்பட்டவர் தனது அமானத்துகளுக்குரிய உரிமையைச் செலுத்தவில்லை என்றால் உலகவாதிகளை விட அதிகமாக விசாரிக்கப்படுவார்கள். ஆக, ஒவ்வொருவரும் இஸ்திக்ஃபார் செய்தவாறு, அல்லாஹ்விடம் உதவியை வேண்டியவாறு, தன்னடக்கத்தை வெளிப்படுத்தியவாறு தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அனைத்து பொறுப்பாளர்களுக்கும் சேவை செய்யக்கூடிய வாய்ப்பினை வழங்குவானாக!

அடுத்ததாக, நாம் பார்க்கின்றோம். குடும்ப சூழல், வியாபார பிரச்சனைகள், பொறுப்பாளர்களுடைய பிரச்சனையில் நீதியினை நிலைநாட்டிய பிறகு நேர்மையினை நிலைநாட்டுமாறு இஸ்லாம் கூறுகிறது. சமூகத்திலும் முழு உலகிலும் நீதி மற்றும் அமைதியினை நிலைநாட்டுவதற்கு இது கடமையாகும்.

**அல்லாஹ் அதிகாரம் அல்மாயிதாவின் 9 ஆம் வசனத்தில் கூறுகின்றான்:**

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ كُونُوا۟ قَوَّٰمِينَ لِلَّهِ شُهَدَآءَ بِٱلْقِسْطِ ۖ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَـَٔانُ قَوْمٍ عَلَىٰٓ

أَلَّا تَعْدِلُوا۟ ۚ ٱعْدِلُوا۟ هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۖ وَٱتَّقُوا۟ ٱللَّهَ ۚ إِنَّ ٱللَّهَ خَبِيرٌۢ بِمَا تَعْمَلُونَ ⊙

*நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகின்றான். (5:9)*

உலகிலிருந்து அநீதி மற்றும் குழப்பத்தை ஒழிப்பதற்கு இது எவ்வளவு அழகிய போதனை என்பதை பாருங்கள். இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் தமது உலக போதனைகளிலோ, சட்டங்களிலோ அல்லது வேறெந்த மார்க்க போதனையிலோ இதுபோன்ற ஓர் அழகிய போதனையை எடுத்துக் காட்ட முடியாது. அல்லாஹ் மூஃமின்களிடம் கூனூ கவ்வாமீன லில்லாஹ் – அல்லாஹ்வுக்காக நிலைத்து நில்லுங்கள். கவ்வாம் என்பதன் பொருள் தனது செயலை மிகவும் சிறந்ததாக எந்தவித குறையும் இல்லாமல் தொடர்ந்து செய்யக்கூடியவர் என்பதாகும்.

ஆக, உண்மையான மூஃமின் இறைவனுக்காகவே பணியாற்றுகின்றார். பிறகு அதில் பின்னடைவு ஏற்படுவதற்கு முயற்சி செய்யவுமாட்டார். மேலும் சோம்பல் அடையவுமாட்டார். சுய இலாபத்தின் கீழ் வாழவுமாட்டார்.

**அல்லாஹ் கூறுகின்றான்:** மூஃமின்களின் பணி நீதிக்கு ஆதரவாக சாட்சி அளிக்க வேண்டும் என்பதாகும். நேர்மைக்கான அளவு என்ன? நேர்மைக்கான அளவு மனைவி மற்றும் உறவினர்களுடன் மட்டும் நேர்மையுடன் நடந்து கொள்வது என்பது கிடையாது. தன்னுடன் தொழில் செய்யக் கூடியவர்களுடன் நேர்மையுடன் நடப்பது மட்டும் கிடையாது.

தனது மேலதிகாரி மற்றும் தனக்கு கீழ் பணிபுரிபவர்களுடன் நல்ல எண்ணத்துடன் பழகுவதும், நல்ல முறையில் பழகுவதும் நீதியுடன் நடப்பது மட்டும் கிடையாது. மாறாக எதிரிகளுடன் நேர்மையுடன் நடப்பதை நேர்மையின் அளவாக அல்லாஹ் வைத்துள்ளான்.

ஏனென்றால் உண்மையான இறையச்சம், எதிரிகளுடன் நீதி மற்றும் நேர்மையுடன் நடக்கும் போது தான் கிடைக்கும். அப்போதுதான் உண்மையான முஸ்லிம் ஆவதற்கான தரத்தை அடைய முடியும். அப்போது தான் தப்லீகிற்கான வழிகள் திறக்கும். அப்போது தான் மற்றவர்களின் மீது இஸ்லாத்தின் உண்மையான போதனை வெளிப்படும்.

**இந்த வசனத்தின் இறுதியிலும் அல்லாஹ் கூறுகின்றான்:**

உங்களது ஒவ்வொரு செயலையும் அல்லாஹ் பார்க்கின்றான். உங்களது தரம் இதுவாக இல்லையென்றால் பிறகு நீங்கள் இறையச்சத்தின்படி செயல்படக் கூடியவராக கருதப்படமாட்டீர்கள. அல்லாஹ் கவ்வாம் என்று கூறி தொடர்ந்து நேர்மையுடன் நிலைத்திருக்குமாறு கட்டளையிட்டிருக்கின்றான்.

**இதனைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மையின்படி முழுமையாக செயல்பட்டால் ஒழிய அடைய முடியாத நீதியை பற்றி இறைவன் கூறுகின்றான்.

لَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَىٰٓ أَلَّا تَعْدِلُوا۟ ۚ ٱعْدِلُوا۟ هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ

*ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீதியில் நிலைத்திருங்கள். இதில் தான் இறையச்சம் உள்ளது.* உங்களுக்கு தெரியும். சமுதாயங்கள் அநியாயமாக கொடுமை இழைப்பதும், கஷ்டம் கொடுப்பதும், இரத்தம் சிந்துவதும், அபகரிப்பதும் மக்கத்து காஃபிர்களைப் போன்று பெண்களையும் குழந்தைகளையும் கொலை செய்வதும், பிறகு சண்டைகளிலிருந்து தவிர்ந்திருக்கவில்லை என்றால் இப்படிப்பட்ட மக்களுடன் நீதியுடன் நடந்து கொள்வது என்பது எவ்வளவு கடினமாக இருக்கும்? ஆனால் திருக்குர்ஆனின் போதனை இப்படிப்பட்ட எதிரியுடைய உரிமையைக் கூட எடுத்துரைத்திருக்கின்றது. நேர்மையுடன் நடந்து கொள்ள கட்டளையிட்டுள்ளது. ஆனால் யாரைப் பற்றி எழுகின்றார்களோ அவர்களைப் பார்த்து கூறுகின்றார்கள். நீங்கள் பொறாமையன் குழியில் வீழ்ந்து கிடக்கின்றீர்கள். பிறகு இப்படிப்பட்ட பரிசுத்தமான விசயங்களை எவ்வாறு புரிவீர்கள்?

இஞ்ஜீலில் தனது எதிரியுடன் அன்பு கொள்ளுங்கள் என எழுதப்பட்டுள்ளது. ஆனால் சமுதாயத்தின் பகைமை மற்றும் அநீதி உங்களை நேர்மை மற்றும் உண்மையை கடைபிடிப்பதில் தடையை ஏற்படுத்த வேண்டாம் என்ற போதனை இன்ஜீலில் இடம்பெறவில்லை.

நான் உண்மையாகவே கூறுகின்றேன். எதிரிகளுடன் அன்புடன் நடப்பது எளிதானதாகும். ஆனால் எதிரிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது, பிரச்சனைகளின் போது நீதி மற்றும் நேர்மையை விடாமல் இருப்பது மிகவும் கஷ்டமாகும். இது பெருந்தன்மைமிக்கவர்களின் பணியாகும். பெரும்பான்மையினர் தமது எதிரிகளுடன் அன்புடன் தான் பழகுகின்றார்கள். மிகவும் கனிவுடன் பேசவும் செய்கின்றனர். ஆனால் அவர்களது உரிமையை அமுக்கி விடுகின்றனர். ஒரு சகோதரர் மற்றொரு சகோதரருடன் அன்பு கொள்கின்றார். ஆனால் அன்பு என்ற திரையில் ஏமாற்றி அவரது உரிமையை அமுக்கி விடுகின்றார். உதாரணமாக வியாபாரத்தில் ஒரு பங்காளி உள்ளார். தந்திரமாக அவரது பெயரை அரசாங்க ரிகார்டில் இருக்கக்கூடிய பத்திரத்திலோ பொருள்களிலோ எழுதுவதில்லை. மற்றபடி அவருடன் அன்புடன் பழகுகிறார். இவ்வாறு இந்த அன்பில் நீதியை மாய்த்துக் கொள்கிறார்.

எனவே, இறைவன் இந்த வசனத்தில் அன்பை குறித்து கூறவில்லை. மாறாக அன்பின் தரத்தைக் கூறியுள்ளான். இறைவன் அன்புடன் பழகுங்கள் என்று கூறவில்லை. மாறாக அன்பிற்கு இருக்க வேண்டிய தரத்தை கூறியிருக்கின்றான். நேர்மை தான் அந்த தரமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: எவன் ஒருவன் தனது கொடிய பகைவனுடன் நேர்மையுடன் நடப்பானோ உண்மை மற்றும் நீதியினை கை விட மாட்டானோ அவன் தான் உண்மையான அன்பு செலுத்துபவனாவான்.

எனவே இதுதான் அந்த தரமாகும். இதனைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

**அடுத்ததாக அல்லாஹ் கட்டளையிடுகின்றான்:**

وَبِعَهْدِ ٱللَّهِ أَوْفُوا۟ அல்லாஹ்வுடன் செய்த உடன்படிக்கையினை நிறைவேற்றுங்கள். இஸ்லாத்தின் மற்றொரு அழகிய போதனை மற்றும் இறைவனது முக்கியமான கட்டளையின்பால் இங்கு கவனமூட்டப் பட்டிருக்கின்றது. அனைத்து

கட்டளையின்படி அமல் செய்வது, மனிதனின் ஒழுக்க மற்றும் மார்க்க அழகிற்கு அவசியமானதாகும். மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் தேவைக்கேற்ப பல்வேறு கட்டளைகளை பிறப்பித்துள்ளான். அதில் இதனையும் கூறுகின்றான். அல்லாஹ்வுக்காக அல்லது அல்லாஹ்வின் விருப்பத்திற்காக இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

இது உங்களது உள்ளம் பரிசுத்தமாக இருக்கும் போது தான் நடைபெறும். உங்களது உள்ளம் நான் செய்யக் கூடிய ஒவ்வொரு செயலும் நான் என் இறைவனுடன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற உணர்வுடன் செய்யும் போது தான் நடைபெறும். அல்லாஹ்வுடன் ஒரு மூஃமின் செய்த மிகப்பெரிய வாக்குறுதி, ஓர் அஹ்மதியுடைய உடன்படிக்கை பைஅத் உடன்படிக்கை ஆகும். இந்த வாக்குறுதியின் உண்மையை நாம் புரிந்து விட்டால் பிறகு தானாகவே எல்லா கட்டளைகளின்படி அமல் செய்வதற்கும் நன்மைகள் செய்வதன் பக்கமும் கவனம் ஏற்பட்டு விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத் நிபந்தனையில் நம்மிடம் செய்த உடன்படிக்கையில் அதில் எவ்வாறு நம்மை முழுமையாக கட்டுப்படச் செய்துள்ளார்கள் என்றால் அதனை நாம் அவ்வப்போது நினைவூட்டிக் கொண்டே இருந்தால் அஹ்மதிய்ய சமூகம் எல்லா விதமான தீமைகளிலிருந்தும் தூய்மை அடைய முடியும். பைஅத் நிபந்தனையில் நாம் என்ன உடன்படிக்கை செய்கின்றோம் என்பதை சுருக்கமாக நான் கூறுகின்றேன்.

முதல் விசயம், வாழ்வின் இறுதி மூச்சு வரை இணை வைக்கக் கூடாது. இணை வைத்தல் பல வகைப்படுகின்றது. அதனைப் பற்றி முன்பே விளக்கமாக கூறப்பட்டு விட்டது. ரமலான் மாதத்தின் ஆரம்ப குத்பாவில் இதனைப் பற்றி கூறப்பட்டது.

அடுத்து, பொய், விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமை, தீமை, அநீதியிழைத்தல், நம்பிக்கை துரோகம் செய்தல், குழப்பம் விளைவித்தல், கிளர்ச்சி செய்தல் ஆகியவை தீமைகள் என்ற விசயத்தின் கீழ் இதுவும் கூறப்பட்டு விட்டது. இவற்றை ஒருபோதும் தம் மீது மேலோங்க விடக் கூடாது.

அடுத்து, தொழுகையை நிறைவேற்றுதல், தஹஜ்ஜுது ஓதுவது, இஸ்திக்ஃபாரில் அழுத்தமும், தொடர்ந்து செய்து வருவதும் ஆகும். தன் மீதுள்ள இறைவனின் கருணைகளை நினைவில் கொள்வது, இதற்காக அவனைப் புகழ்வது ஆகியவையாகும். பாகிஸ்தானின் மோசமான நிலையினால் இங்கு பலரும் வந்திருக்கின்றனர். அவர்கள் மீது அல்லாஹ் மாபெரும் கருணை புரிந்திருக்கின்றான். சுதந்திரமும் அளித்துள்ளான். பொருளாதார ரீதியில் சிறந்து விளங்கவும் செய்துள்ளான். ஆக, இந்த விசயத்திற்காக ஆணவம், தற்பெருமை கொள்வதற்குப் பதிலாக அல்லாஹ்வைப் புகழ வேண்டும். அவனது பேருதவிகளுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

அடுத்து, எவருக்கும் எந்த விதமான கஷ்டமும் கொடுக்கக் கூடாது. அல்லாஹ்வுடன் விசுவாசமான தொடர்பு கொள்ளுதல் மற்றும் ஒருபோதும் மனங்கோணாமல் இருப்பது, அல்லாஹ் அருள்களை வழங்கும் போது அவனுக்கு நன்றி செலுத்துவதும் சில சோதனைகளை கடக்க வேண்டியது வந்தாலும் கூட மனங்கோணக் கூடாது.

அடுத்து, உலக சடங்குகளிலிருந்து தன்னை விலக்கி எல்லா விதமான மன இச்சைகளிலிருந்து தன்னை பாதுகாத்து, அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய போதனையின்படி செயல்படுவது.

அடுத்து,தற்பெருமையையும் அகம்பாவத்தையும் விட்டு விட்டு பணிவு மற்றும் தன்னடக்கத்தை மேற்கொள்வது.

இஸ்லாத்தின் கண்ணியத்தை தனது உயிர், பொருள் மற்றும் குழந்தைகளை விட விருப்பமானதாகக் கருதுவது.

படைப்பினங்களுடன் அனுதாபம் மற்றும் மனித குலத்திற்கு நன்மை பயப்பதற்காக தனது அனைத்து ஆற்றல்களுடன் முயற்சி செய்வது, படைப்பினங்களுக்கு சேவை செய்யக்கூடிய மனப்பான்மை மிக அதிகமாக இருக்க வேண்டும்.

அடுத்து கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அன்பு மற்றும் கட்டுப்படுதலின் வழக்கத்திற்கு மாற்றமான உதாரணத்தை நிலைநாட்டுவது, அதற்கு முன்பு எந்த விசயத்திற்கும் முக்கியத்துவம் அளிக்காமல் இருப்பது.

ஆக, இதுதான் நாம் அஹ்மதிய்யத்தில் இணைந்து செய்துள்ள உடன்படிக்கை ஆகும். எந்த அளவு இந்த உறுதிமொழியை நாம் நிறைவேற்றுகின்றோம் என தன்னை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது.

ரமலானில் பல்வேறு நன்மைகள் செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. இன்று கடைசி நாளாகும். இதுவரை இதனை நாம் எந்த அளவு செய்து வந்துள்ளோம் என ஆராய வேண்டும். மேலும் இதனை வருடம் முழுவதும் செய்து வர

வேண்டும். நாம் எந்த அளவு அல்லாஹ்வுடன் விசுவாசத்திற்கான வாக்குறுதியினை நிறைவேற்றுகின்றோம் என்பதை ஆராய வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் இவ்வாறு உடன்படிக்கை செய்தீர்கள் என்றால் உங்களுக்கு மாபெரும் கூலி கிடைக்கும். எப்படிப்பட்ட கூலி கிடைக்கும் என்றால் அதனை உங்களால் சிந்தித்துக் கூட பார்க்க முடியாது. எனவே உடன்படிக்கை செய்து அதன்படி அமல் செய்யுங்கள்.

அடுத்து அல்லாஹ் இந்த வாக்குறுதியையும் அளிக்கின்றான். அதாவது நீங்கள் அல்லாஹ்வுடன் செய்த உடன்படிக்கைகளை நிறைவேற்றினால் அல்லாஹ் உங்களது உள்ளங்களை தூய்மைப்படுத்தி எல்லா விதமான தீமைகளிலிருந்து பரிசுத்தப்படுத்தி அவனுக்கு நெருக்கமான மக்களுடன் மேலும் அவன் நேசிக்கக்கூடிய மக்களுடன் உங்களை சேர்த்து வைப்பான்.

உடன்படிக்கையை நிறைவேற்றவில்லையென்றால் அருள்களுக்கு உரியவராக மட்டும் ஆகமாட்டோம் என கருதாதீர்கள். மாறாக அல்லாஹ் கூறுகின்றான்: உங்களிடம் உங்களுடைய உடன்படிக்கை குறித்தும் விசாரிக்கப்படும். இதில் எல்லா வகையான உடன்படிக்கைகளும் அடங்கும். இறைவனுடன் செய்த உடன்படிக்கை நிறைவேற்றாததினாலும் விசாரிக்கப்படுவர். மேலும் அடியார்களுடன் செய்த உடன்படிக்கையை அதாவது திருக்குர்ஆனின் கட்டளைகளுக்கேற்ப செய்யப்பட்ட உடன்படிக்கையை நிறைவேற்றாததினாலும் விசாரிக்கப்படுவீர்கள்.

உதாரணமாக கடந்த குத்பாவில் அநாதைகளைப் பராமரிப்பது பற்றி கூறப்பட்டது. அல்லாஹ் இவர்களை பாதுகாக்கக்கூடிய பொறுப்பையும் உடன்படிக்கையாக ஆக்கியுள்ளான். நீங்கள் இந்த பொறுப்பை நிறைவேற்ற வில்லை என்றால் பிறகு நீங்கள் உடன்படிக்கையை முறிக்கின்றீர்கள். இதனைப் பற்றி அல்லாஹ் விசாரனை செய்வான்.

இதனைப் போன்று அரசாங்க தலைவர்கள் உள்ளனர். அவர்கள் தமது அரசாங்கப் பணிகளை நிறைவேற்ற வில்லையென்றால் அவர்களும் பதில் கூற வேண்டியது இருக்கும். பொதுமக்களுடைய உரிமைகளைச் செலுத்த வில்லையென்றால் அவர்களும் விசாரிக்கப்படுவர். துரதிஷ்டமாக முஸ்லிம் நாடுகளில் எத்தனை தலைவர்கள் உள்ளனரோ அவர்களின் நிலை இதுவாகவே உள்ளது. அவர்கள் தனது கடமையை நீதி மற்றும் நேர்மையுடன் செலுத்துவதுமில்லை. பொதுக்களின் உரிமைகளைச் செலுத்துவதுமில்லை. விசாரிக்கப்படமாட்டோம் என பயமின்றி இருக்கிறார்கள். அல்லாஹ் கண்டிப்பாக விசாரிக்கப்படுவீர்கள் எனக் கூறுகின்றான். பொறுப்பாளர்களைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அவர்கள் நேர்மையாக நடக்க வேண்டும். அவர்களும் தமது உரிமையை செலுத்த வில்லையென்றால் எந்த அளவு ஜமாஅத் பணிக்காக நேரம் ஒதுக்க வேண்டுமோ அந்த அளவு ஒதுக்கவில்லை என்றால் சிந்தித்து தீர்ப்பு வழங்கவில்லை என்றால் ஜமாஅத் உறுப்பினர்களுடன் பிரச்சனையில் நீதியுடன் நடக்கவில்லை என்றால் அவர்கள் அல்லாஹ்விடம் பதில் கூட வேண்டியது வரும்.

ஒரு சாதாரண அஹ்மதி தனது உடன்படிக்கையை நிறைவேற்றுவது தன் மீதுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதைக் குறித்து நான் எடுத்துரைத்து வந்துள்ளேன். பைஅத் நிபந்தனையின் உடன்படிக்கையை நிறைவேற்ற முயற்சி செய்யவில்லை என்றால் பிறகு இறைவன் முன்பு பதில் கூற வேண்டியது வரும்.

மேலும் இன்னொரு உடன்படிக்கையும் உள்ளது. அதன்பால் நான் கவனமூட்ட விரும்புகின்றேன். அதாவது ஒவ்வொரு நாட்டிலும் வாழக்குடிய குடிமக்கள், இறைவனை சாட்சியாக வைத்து அல்லது திருக்குர்ஆனை சாட்சியாக வைத்து நாட்டுடன் செய்யக்கூடிய உடன்படிக்கையும் அல்லது நாட்டின் அரசருடன் செய்யும் உடன்படிக்கையும் நிறைவேற்ற வேண்டிய உடன்படிக்கைகளாகும். அதனை நிறைவேற்றுவது அதன்படி செயல்படுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும். உடன்படிக்கைளை நிறைவேற்றாமல் இருப்பது என்பது ஈமானின் பலவீனம் ஆகும்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

நாட்டுப்பற்று ஈமானின் அங்கமாகும்.

இதன் நுட்பத்தைக் குறித்தும் அஹ்மதிகள் சிந்திக்க வேண்டும். சில இடங்களில், தொழில் செய்பவர்களில் சிலர், தொழிலுக்காக பணியாளர்களையும் வைக்கின்றனர். அவர்களுக்கு மிகவும் குறைவான கூலி வழங்குகின்றனர். அல்லது குறைவான கூலியையே வெளிப்படுத்துகின்றனர். மிச்சத்தை Benfit Council இடம் கேட்குமாறு கூறுகின்றார்கள். நாங்கள் உங்களது நன்மைக்காகத்தான் இவ்வாறு செய்கின்றோம் எனக் கூறுகின்றனர். இதில் அவர்கள் தானும் பொய் கூறுகின்றனர். மற்றவரையும் பொய் கூற வைக்கின்றனர். தானும் உடன்படிக்கையை மீறுகின்றனர். மற்றவர்களையும் உடன்படிக்கையை மீற வைக்கின்றனர்.

உண்மையான விசயம், இதில் அவர்கள் சுயமாக இலாபம் பெறுகின்றார்கள். இப்படிப்பட்ட மக்கள், இவ்வாறு சம்பாதிக்கக் கூடியதிலிருந்து வரியை ஏமாற்றுகின்றனர். இது அரசாங்கத்திற்கு ஏற்படும் நஷ்டம் ஆகும். அரசாங்கத்துடன் செய்த உடன்படிக்கையை மீறுவதாகும். அந்த பணியாளர்களுக்கு குறைவான கூலி கொடுத்து முழுமையான பணியை வாங்கி அல்லது கூலியை விட கொஞ்சம் அதிகமாக வேலை வாங்கி கவுன்ஸிலிலிருந்து அவர்களுக்கு அலோவன்ஸ் பெற்றுக் கொடுத்து நாட்டின் கஜானாவுக்கு இழப்பை ஏற்படுத்துகின்றனர். இந்த நாட்டின் குடியுரிமையைப் பெற்று இவ்வாறு செய்யும் இந்த அனைத்து விசயங்களும் மாபெரும் அநீதியாகும். மேலும் உடன்படிக்கையை முறிப்பதாகும். இது பைஅத் உடன்படிக்கையையும் முறிப்பதாகும். ஏனென்றால் எப்போதும் உண்மையுடன் நடப்பேன் என்பதுதான் உடன்படிக்கையாகும். ஆக அவர்கள் அரசாங்கத்துடன் செய்த உடன்படிக்கையையும் மீறுகின்றனர். இறைவனுடன் செய்த உடன்படிக்கையையும் மீறுகின்றனர். மேலும் பாவம் செய்தவர்களாகின்றனர். ஆக ஓர் அஹ்மதி எல்லா விசயங்களிலும் தன்னை ஆராய வேண்டிய அவசியம் உள்ளது.

உடன்படிக்கையை நிறைவேற்றாததினால் ஏற்படக்கூடிய மற்றொரு தீமையைப் பற்றி நான் கூற விரும்புகின்றேன். இது வீட்டிலிருந்து வெளியேறி இரண்டு வீட்டையும் குடும்பத்தின் அமைதியையும் சீர்குலைக்கக் காரணமாக அமைகின்றது. அது குலா மற்றும் தலாக் போன்ற சமயத்தில் இதற்கு முன்பும் கூறி வந்துள்ளேன். அல்லாஹ்வின் கட்டளையின்படி அமல் செய்யாமல் இருப்பது மற்றும் தனது உடன்படிக்கையை மீறுவது போன்றவற்றைப் பற்றி ஏற்கனவே கூறி விட்டேன். இந்தப் பட்டியலில் நேர்மை, நேரிய பேச்சைப் பேசுவது போன்றவற்றைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. இதன்படி அமல் செய்தால் பிரச்சனைகள் தீர்ந்து விடும். அல்லது பிரச்சனைகள் உருவாகாமல் இருக்கும்.

ஆனால் பிரச்சனை உருவாகும் போது கணவன் மனைவிக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்படும் போது அல்லாஹ் நமக்கு கூறிய அறிவுரைகளைக் குறிப்பாக கண்முன் நிறுத்த வேண்டும். குறிப்பாக கணவன் அவ்வாறு செய்ய வேண்டும்.

**அல்லாஹ் கூறுகின்றான்:**

وَإِنْ أَرَدْتُّمُ اسْتِبْدَالَ زَوْجٍ مَّكَانَ زَوْجٍ ۙ وَّاٰتَيْتُمْ إِحْدٰىهُنَّ قِنْطَارًا فَلَا تَأْخُذُوْا
مِنْهُ شَيْـًٔا ۚ أَتَأْخُذُوْنَهٗ بُهْتَانًا وَّإِثْمًا مُّبِيْنًا ۝ وَكَيْفَ تَأْخُذُوْنَهٗ وَقَدْ أَفْضٰى بَعْضُكُمْ
إِلٰى بَعْضٍ وَّأَخَذْنَ مِنْكُمْ مِّيْثَاقًا غَلِيْظًا ۝

*நீங்கள் ஒரு மனைவியின் இடத்தில் மற்றொரு மனைவியை மாற்றிக் கொள்ள விரும்பும் நிலையில் நீங்கள் அவர்களுள் ஒருத்திக்குப் பொருள் குவியல் ஒன்றினை கொடுத்திருந்தாலும், அதிலிருந்து சிறிதும் திரும்ப எடுத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் அதனை அவதூறினாலும் மிக வெளிப்படையான பாவத்தினாலும்தான் எடுத்துக் கொள்வீர்களா?*

*நீங்கள் உங்களுக்குள் ஒருவருக்கொருவர் இணைந்திருக்கவும், அவர்கள் உங்களிடம் உறுதிவாய்ந்த ஓர் உடன்படிக்கையைப் பெற்றிருக்கவும் செய்யும் நிலையில் நீங்கள் அதை எவ்வாறு எடுத்துக் கொள்வீர்கள்? (4:21,22)*

இங்கு நம்மிடத்தில் குலா மற்றும் தலாக் பிரச்சனையில் இந்த கட்டளையின்படி செயல்பட முயற்சி செய்தால், பிறகு கஸாவில் நீண்ட நாட்களாக நடைபெறக்கூடிய சண்டைகள் நடைபெறாது. சிலர் தலாக் கொடுத்த பின்னர் இட்டுக்கட்டியும் கூறுகின்றனர். இது வெளிப்படையான பாவச்செயல் ஆகும். அது உண்மையாகவே இருந்தாலும் கூட விசயத்தை இறைவனிடம் விட்டு விட வேண்டும். அதற்கும் அதாவது சாட்சிகளுக்கும் பல்வேறு நிபந்தனைகள் உள்ளன.

இரண்டாவது முக்கியமான விசயம் திருமணம் ஓர் உடன்படிக்கையாகும். இது ஆணும் பெண்ணும் செய்து கொள்ளும் உடன்படிக்கையாகும். கணவன் மனைவிக்கிடையில் இந்த உடன்படிக்கை நடைபெறுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்: இது தனிமையில் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கையாகும். இதற்கு வெளிப்படையான எந்தவொரு சாட்சியும் இருப்பதில்லை. ஆனால் இந்த உடன்படிக்கையையும் நிறைவேற்றுவது அவசியமாகும்.

இறைவன் எல்லா இடங்களிலும் இருக்கின்றான். ஏதாவது காரணத்தினால் இந்த உடன்படிக்கையை முறிக்கிறீர்கள் என்றாலும் இந்த பந்தத்தை முடிக்கின்றீர்கள் என்றாலும் தனிமையில் ஏற்பட்ட விசயங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் கொடுத்த அன்பளிப்புகளை திரும்ப கேட்காதீர்கள். பெண்ணின் சில வெளிப்படையான தவறுகளைப் பார்த்து முடிவெடுத்தாலோ தவிர கேட்கக் கூடாது. எந்த நிலையிலும் ஆணுக்கு நிர்ணயிக்கப்பட்ட மஹர் தொகையைச் செலுத்தி விட வேண்டும். குலா கொடுத்து விட்டாள் என்ற சாக்குப்போக்குகளை

கூறாமல் கொடுத்து விட வேண்டும். மஹருக்கு இதனுடன் எந்தவித தொடர்பும் இல்லை. இதுபோன்ற சாக்குப் போக்குகளை கூறக்கூடாது. இதற்கு மேலும் பல விளக்கங்கள் உள்ளன.

தற்போது நான் இதன் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன். அதாவது ஆணும் பெண்ணும் திருமணம் என்பது ஓர் உடன்படிக்கை ஆகும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதனை முடிந்த வரை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். துரதிஷ்டவசமாக உடன்படிக்கையை முறிப்பதால் இருந்தாலும் சில விசயங்களைப் பாதுகாக்க வேண்டும். ஒருவர் மற்றவரது இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டும். இங்கு பெண்ணுக்கு சமமான உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதனை இறைவன் தான் நிர்ணயித்துள்ளான். பெண்ணுக்கும் கடமை இருக்கின்றது. அவளும் நேரிய கூற்றினைக் கையாண்டு நேர்மையினை மேற்கொண்டு இந்த உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். தனது வீட்டின் பொறுப்புகளைக் கண்காணிக்க வேண்டும். வேறுவிதமான சூழ்நிலை ஏற்பட்டால் ஆண்கள் மீது எதனையும் இட்டுக்கட்டி கூறக்கூடாது.

ஒரு மூஃமினிடம் தென்பட வேண்டிய தரத்தைக் குறித்து கூறுகையில் **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

தனது விவகாரத்தில் அது இறைவனுடனோ, படைப்பினங்களுடனோ தொடர்புடையதாக இருந்தாலும் அந்த மூஃமின் சுதந்திரமான மற்றும் கட்டுபாடற்றவர் அல்ல. மாறாக இறைவனது பார்வையில் எந்த விதமான ஆட்சேபனைக்கும் ஆளாகி விடக்கூடாது என அச்சப்பட்டுக் கொண்டிருப்பர். தம்மிடமுள்ள அமானத்துகளையும், தாம் செய்த உடன்படிக்கைகளையும் கவனத்துடன் பேணி வருவர். எப்போதும் தம்மிடமுள்ள அமானத்துகளையும் தமது உடன்படிக்கைகளையும் கண்காணித்து வருவர். இறையச்சம் என்ற தொலைநோக்கியுடன் அதன் அந்தரங்க நிலையை கவனித்து வருவர். அவர்களிடம் உள்ள அமானத்துகளும் அவர்களது உடன்படிக்கைகளிலும் மறைவாக எவ்வித குறைபாடும் வந்து விடக்கூடாது என நினைப்பார்கள்.

அவர்களிடம் உள்ள இறைவனது அமானத்துகளை அதாவது அனைத்து ஆற்றல்களையும், அனைத்து உறுப்புகளையும், உயிர், பொருள், கண்ணியம் ஆகியவற்றை இறையச்சத்தைப் பின்பற்றியவாறு அதற்கேற்ற இடங்களில் உபயோகப்படுத்துவார்கள். ஈமான் கொள்ளும் போது இறைவனுடன் செய்த உடன்படிக்கையை முழுமையான சத்தியத்துடன் நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

இதனைப்போன்று அவர்களிடம் உள்ள படைப்பினங்களின் அமானத்துகளை மேலும் அமானத்தின் கட்டளையின் கீழுள்ள பொருள்கள் அனைத்திலும் சக்தியுள்ள வரை அவர்கள் தக்வாவின்படி செயல்படுவார்கள். அதில் ஏதாவது முரண்பாடு ஏற்பட்டால் தக்வாவை முன் நிறுத்தி முடிவு எடுப்பார்கள். அந்த முடிவினால் அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டாலும் சரியே!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனுடைய ஆன்மீகத்தின் அனைத்து அழகும், தக்வாவின் அனைத்து நுட்பமான வழிகளிலும் செல்வதில் உள்ளது. தக்வாவின் நுட்பமான வழிகள், ஆன்மீக அழகின் நுண்ணிய வரைபடமும், அழகிய வடிவமும் ஆகும். இறைவனது அமானத்துகளையும் நம்பிக்கையின் உடன்படிக்கையையும் முடிந்த வரை பேணி பாதுகாப்பது, தலை முதல் பாதம் வரை ஆற்றல் மற்றும் உறுப்புகளில் உள்ள வெளிப்படையான கண்கள், காதுகள், கைகள், கால்கள் போன்றவையும் உட்புறமாக உள்ளம் போன்ற ஆற்றல்களும், ஒழுக்கங்களும் இவைகளுக்கு எந்த அளவு ஆற்றல்கள் உள்ளனவோ அவற்றை காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப உபயோகப்படுத்துவது, அனுமதிக்கப்படாத செயல்களிலிருந்து தடுப்பது, மறைவான தாக்குதல்களிலிருந்து கவனமாக இருப்பது, இதனுடன் அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவது போன்றவை மனிதனின் ஆன்மீகத்தில் அனைத்து அழகுடன் தொடர்புடையவற்றைப் பெறுவதற்குரிய வழியாகும்.

இறைவன் திருக்குர்ஆனில் தக்வாவுக்கு லிபாஸ் – ஆடை என்று பெயர் சூட்டியுள்ளான். லிபாஸுத் தக்வா திருக்குர்ஆனின் சொல் ஆகும். இது ஆன்மீக அழகு, ஆன்மீக பொலிவு தக்வாவில் இருந்து தான் பிறக்கிறது என்பதை தெரிவிக்கிறது. தக்வா என்பது மனிதன் இறைவனது அனைத்து அமானத்துகளையும், ஈமானின் உடன்படிக்கைகளையும் மேலும் படைப்பினங்களின் அனைத்து அமானத்துகளையும் உடன்படிக்கைகளையும் முடிந்த வரை பேணி பாதுகாக்க வேண்டும். அதாவது அதன் நுண்ணிய பகுதிகளையும் கண்காணித்து அதன்படி முடிந்த வரை செயல்பட வேண்டும்.

நாம் தக்வாவின்படி செயல்புரிந்து இறைவனது கட்டளைகளின்படி அமல் செய்யக்கூடியவர்கள் ஆவோமாக! மேலும் தனது அனைத்து உடன்படிக்கைகளையும் பேணக்கூடியவர்களாக ஆவோமாக! மேலும் இந்த ரமலானில் நாம் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு செய்த முயற்சிகளில் தொடர்ந்து நிலைபெறக் கூடியவர்களாக ஆவோமாக! இன்றைய ஜுமுஆவை ஜுமுஅத்துல் விதா என்று கருதி தொழுது ரமலான் மாதத்தில் நன்மைகள் செய்து இது போதும் என்று இருந்து விடக் கூடாது. நன்மையைத் தொடர்ந்து செய்து வரக்கூடியவரும் தனது உடன்படிக்கையைப் பேணுபவருமே மூஃமின் என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்த ரமலான் நம்மை எண்ணற்ற அருள்களுக்குரியவராக ஆக்கி விட்டு செல்லட்டுமாக! திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள இறை கட்டளைகளை முன்பை விட அதிகமாக புரியக்கூடிய நிலை நம்மில் உருவாகட்டுமாக! நான் சில கட்டளைகளை உதாரணமாக எடுத்துரைத்தேன். இந்த வகையில் நம்மில் ஒவ்வொருவரும் இதனை தேட வேண்டும். அப்போது தான் நாம் உண்மையாக ரமலானிலிருந்து பலன் பெற்ற மக்களை சேர்ந்தவராக ஆக முடியும். அல்லாஹ் நம்மில் பலரை இதிலிருந்து பலன்பெற்றவர்களாக ஆக்குவானாக! மேலும் பலன் பெற்றக் கொண்டே செல்பவர்களாக ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at **BAIT-UL-FUTUH MOSQUE,** London

on **09.08.2013**

Translated by : Maulavi N. ZIAULHAQ

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456